# <u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
# <u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
# <u>MCOP .No. 150/2021</u>

**<u>நாள் : 22.04.2025</u>**

**எ.ம.சா.** 2 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மருதாச்சலம் | மாவட்டம் | : | |
| தந்தை பெயர் | : | திரு. கோவிந்தராஜ் | வயது | : | |
| ஊர் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | தேசியம் | : | |

**முதல் விசாரணை**

1. நான் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கி அனுமதி கடிதத்தை தாக்கல் செய்கிறேன். (அது எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2. இரண்டு வாகனங்கள் தொடர்பாக சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது என்றால் சரிதான். TN 48 K 7376 பதிவு எண் கொண்ட டிப்பர் லாரியின் பதிவு சான்றிதழ் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். மேற்கண்ட வாகனம் 15.02.2021 அன்று எங்கள் அலுவலகத்திற்கு ஆய்வுக்காக கொண்டு வரப்பட்டது. மேற்கண்ட வாகனத்தின் பதிவு சான்றின் உண்மை நகல் கொண்டு வந்துள்ளேன். (அது எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

3. அதில் உரிமையாளர் பெயர் தேவன் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தின் தகுதி சான்று கொண்டுவந்துள்ளேனா என்றால் அதனை ஆஜர்படுத்தவில்லை. மேற்கண்ட லாரியின் பர்மிட் கொண்டு வந்துள்ளேன். (மேற்கண்ட லாரியின் பர்மிட் உண்மை நகல் எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்கண்ட வாகனத்தை தமிழ்நாட்டுக்குள் இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 08.02.2021 அன்று தமிழ்நாட்டுக்குள் இயக்க அனுமதி வழங்கப்பட்டது.

4. மேற்கண்ட வாகனத்தினுடைய எடை எவ்வளவு என்றால் 18,500. மேற்கண்ட வாகனம் டிப்பர் லாரி. 08.020.2021 அன்று மேற்கண்ட வாகனம் காப்பீடு செய்யப்பட்டு இருந்ததா என்றால் செய்யப்பட்டு இருந்தது. மேற்கண்ட வாகனம் NATIONAL INSURANCE COMPANY இல் காப்பீடு செய்யப்பட்டு இருந்தது. அதன் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். (அது எ.ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

5. மேற்கண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகலை கொண்டு வந்துள்ளேன். (அது எ.ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அதில் குற்ற எண் 40/21, திருப்பத்தூர் கிராமிய காவல்நிலையம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தையும் அது தொடர்புடைய ஆவணங்களையும் திருப்பத்தூர் கிராமிய காவல்நிலையத்தினர் ஆஜர்படுத்தியதை பரிசிலீத்து தான் எ.ம.சா.ஆ.8 வழங்கப்பட்டுள்ளது.

6. மேற்கண்ட ஆவணத்தின் நகல் காவல்துறையினரிடம் கொடுக்கப்பட்டது. காவல்துறையினரின் உதவியின்றி மேற்கண்ட ஆவணத்தை நாங்கள் தன்னிச்சையாக தயாரிக்க இயலாது என்றால் சரிதான். TN 83 M 8273 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் தொடர்புடைய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அதன் பதிவு சான்றிதழ் உண்மை நகல் கொண்டு வந்துள்ளேன். (அது எ.ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

7. மேற்கண்ட வாகனத்தின் உரிமையாளரின் பெயர் அலெக்சாண்டர். மேற்கண்ட வாகனம் 01.08.2024 அன்று ஆய்வுக்காக எங்கள் அலுவலகத்தில் ஆஜர்படுத்தப்பட்டது. விபத்து நடந்த 08.02.2021 முதல் ஆய்வுக்கு சமர்பிக்கப்பட்ட 01.08.2024 தேதிக்கு முந்தைய நாள் வரை ஆய்வுக்காக எங்கள் அலுவலகத்தில் சமர்பிக்கப்படவில்லை. மேற்கண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல் கொண்டு வந்துள்ளேன். (அது எ.ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

8. அதில் மேற்கண்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் பெயர் கருணாகரன் மகன் அலெக்சாண்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அவரது முகவரி எண் 2/11, ஜீ ஜீ காலணி, கசிநாயக்கன்பட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வானத்தின் ஓட்டுநர் பெயர் உரிமையாளரின் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கப்படவில்லை. மேற்கண்ட வாகனம் சோழமண்டலம் ஜென்ட்ரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருப்பதாக பாலிசி எண்ணுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. மேற்கண்ட வாகனத்தின் முன்பகுதியில் சேதாரம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.10 விவரங்கள் காவல்துறையினர் ஆஜர்படுத்திய வாகனம் மற்றும் ஆவணங்களை பரிசிலீத்து தான் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தின் நகல் காவல்துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட வாகனத்தின் காப்பீட்டு பதிவு விவரங்களை எங்கள் அலுவலக கணினி கோப்புகளை பரிசிலீத்து கொண்டு வந்துள்ளேன். (அந்த நகல் எ.ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

10. மேற்கண்ட வானத்தின் ஓட்டுநர் அலெக்சாண்டரின் ஓட்டுநர் உரிமம் மற்றும் அவருடைய தந்தை கருணாகரனின் ஓட்டுநர் உரிமம் எங்களிடம் சமர்பிக்கப்படவில்லை.

**2 மற்றும் 3 மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. TN 48 K 7376 பதிவு எண் கொண்ட லாரியை உரிய நேரத்தில் ஆய்வு செய்து அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/. V.L. சந்தோஷ்,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.